
# அருள் ஒளி



நல்லை
ஆதீனம்
இரண்டாவது
குருமகா
சந்நிதானம்
அவர்களை
போற்றி
வணங்குகிறோம்

இதழ்: 167

வைகாசி~ 2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (வைகாசி ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு முதல்வரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது

ஆசிரியர் உரை

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் 1966 ஆம் ஆண்டு மணிபாகவதர் என்று அழைக்கப்பட்ட சமய சொற்பொழிவாளர் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டது. அப்பெரியார் இலங்கையிலும் இந்தியாவிலும் மலேசியாவிலும் சென்று பல சமய தொடர் விரிவுரைகளை ஆற்றி பிரபல்யம் பெற்றவர். மணி ஐயர் என்றும் மணிபாகவதர் என்றும் அழைக்கப்பட்ட பெரியார் இந்தியாவிலேயே பெங்களூர் கைலாச ஆச்சிரமத்திலும் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் குருவாக விளங்கிய பெரியார்களிடம் ஞான தீட்சை பெற்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சாமிகள் என்ற நாமத்தோடு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து துறவு வாழ்வை மேற்கொண்டவர்.

ஆரம்பத்தில் பைமன் றோட்டிலும் பின்பு நல்லூர் கோயில் வீதியிலே கந்தன் கருணைக்கு அருகிலும் தற்காலிகமாக வேறு வீடுகளிலும் ஆதீனத்தை நடாத்தி 1969 ஆம் ஆண்டு புத்தூர் மழவராயர் அவர்களுடைய சொத்தாக பேணப்பட்டு வந்த நல்லூர் கோயில் வீதியில் அமைந்த கதிரேசன் அறக்கட்டளை மண்டபம் என்ற பெயரிலே அழைக்கப்பட்ட இப்போது ஆதீனம் அமைந்திருக்கின்ற

நிலத்தில் 50 ஆண்டுகள் குத்தகைக்கு அந்த இடத்தைப் பெற்று திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவி செயற்படுத்தி வந்தார்கள். முதலாவது சன்னிதானமாகிய சோமசுந்தரர் தம்பிரான் அவர்களுடைய சமய சொற்பொழிவு மக்களால் ஈர்க்கப்பட்டு சோமசுந்தரதம்பிரான் பெரிதும் மதிக்கப்பட்டார்.

அவர்களுடைய சீடர்களாக பலர் வந்த போதிலும் நிரந்தரமாக அவரிடத்திலேயே நின்று பணி செய்தவர் சுந்தரலிங்கம் என்ற நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள ஒரு இளைஞன். அந்த இளைஞன்தான் முதலாவது குருமா சன்னிதானத்தின் நம்பிக்கையுடன் அடுத்த தலைமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கைலாச ஆச்சிரமத்து சுவாமிகளினால் ஆசி வழங்கப்பட்டு பின்பு மதுரை ஆதீனத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டு 1981 ஆம் ஆண்டு இளவரசு என்கின்ற ஆதீன சம்பிரதாய பட்டம் வழங்கப்பட்டு ஞான தீட்சை கொடுத்து அன்று முதல் ஆதீனத்திலேயே தங்குகின்ற பாக்கியம் பெற்றார்.

1981 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாவது குரு மகா சன்னிதானம் திடீரென இறையடி சேர்ந்த பின்பு அன்று ஆதின ஆலோசகர்களாக விளங்கிய பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த இளைஞனை ஆதின குரு முதல்வராக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டார்கள்.

அதன் விளைவாக அடுத்த ஆண்டு நல்லூர் கார்த்திகை திருவிழா அன்று முழுமையாக ஆதின சுவாமிகள் ஆக அங்கீகரித்து பட்டாபிஷேகம் செய்து ஆதீன பீடத்திலே அமர்ந்தார்கள். சுமார் 43 ஆண்டுகள் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதல்வராக அரும்பணியாற்றி இலங்கை, இந்தியா, மலேசியா ,சிங்கப்பூர், கனடா, சுவிஸ், ஆஸ்திரேலியா மற்றும் லண்டன் போன்ற நாடுகளிலும் பல மகாநாடுகள் சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பெருமை இரண்டாவது குரு மகா சன்னிதானத்தை சாரும்.

ஒரு இளைஞன் தனது வாழ்வை அர்ப்பணித்து துறவு வாழ்வுக்கு வந்ததனால் நாம் பெருமை அடைந்தோம். ஈழத்திலே ஒரே ஒரு ஆதீனம் என்ற பெருமையோடு நல்லை ஆதீனம் சிறப்புற்றது. நல்லை ஆதீன குரு முதல்வர் சமய வாழ்வு வாழ்ந்தார்கள் ஆதீனக் கலா மண்டபம் திருத்தப்பட்டது. ஆதீன அலுவலகம், ஆதீன இருப்பிடம் இரண்டு மாடி கட்டிடமாக மாற்றப்பட்டது. எல்லா

வசதிகளையும் தன்னுடைய சிறப்பினால் பலருடைய உதவியோடு செய்தார். இலங்கை புனர்வாழ்வு அமைச்சின் உடைய நிதியிலே கலாமண்டபத்தையும் உணவு மண்டபத்தையும் திருத்துவித்த சுவாமிகள் அகில இலங்கை இந்து மாமன்றம் லண்டன் திருக்கோவில்கள் ஒன்றியம் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் இவர்களுடைய உதவியோடு புதிய இரு மாடி கட்டடத்தை அமைக்கின்ற பாக்கியம் பெற்றார். நல்லை ஆதீன சுவாமிகளின் அயராத தொண்டு மறக்க முடியாது.

நான்கு ஆண்டுகளாக சில நோய்களினால் பிடிக்கப்பட்ட சுவாமிகள் அந்த நோய்களுக்கு வைத்தியம் செய்து கொண்டு, தன்னுடைய கடமையை செய்து கொண்டிருந்தார். ஆனால் கடந்த தை மாதம் முதல் சுவாமியின் நடை மற்றும் தனது நித்திய கடமைகளைச் செய்ய மிகவும் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான வைத்தியர்களுடைய உதவியோடு சிகிச்சை பெற்று வந்தார். மேலும் மேலதிக சிகிச்சை பெறுவதற்காக ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி கொழும்புக்கு சென்று கொழும்பிலே 30-ஆம் திகதி வைத்தியர்களை சந்தித்து சகல பரிசோதனைகளையும் முடித்துக் கொண்டு முதலாம் திகதி அகில இலங்கை கம்பன் கழகத்தின் கொழும்பு இல்லத்தில் தங்கியிருந்தார். இரண்டாம் திகதி காலையிலே வைத்தியசாலைக்குச் செல்வதாக இருந்த போது, யாரும் எதிர்பாராத விதமாக முதலாம் திகதி இரவு 9:40 க்கு திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டு ஒரு சில நிமிடங்களில் சிவப்பேறு அடைந்தார்.

அவரது திருவுடல் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டு நல்லை ஆதீனத்திலே சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று பின்பு செம்மணி மயானத்திலே அவர் ஏற்கனவே தன்னை செம்மணியிலே எரியூட்ட வேண்டும் என்று வேண்டுதல் விடுத்தமைக்கு அமைய எரியூட்டப்பட்டது. அவரது இறுதிக் கடனை செய்யும் பேறு அடியேனுக்கு கிடைத்தது. சைவ உலகம் இன்று ஒரு அற்புதமான துறவியை இழந்து தவிக்கின்றது. அன்னாரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாக சைவ மக்கள் கருதுகின்றனர். இறை அருள் எம் யாவரையும் வழி நடத்த வேண்டுகிறோம்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்
ஆசிரியர் ~ அருள்ஒளி

# ஈழத்தில் சிவப்பணி ஆற்றிய நல்லை ஆதீனம் சிவப்பேறடைந்தார்



யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் 01.05.2025 சித்திரை திருவாதிரை, சுக்ல பக்ஷ (வளர்பிறை) பஞ்சமித் திதியில் பரிபூரணம் எய்தியுள்ளார்.

தமது 68ஆவது அகவையில் கொழும்பில் சுவாமிகள் இவ்வாறு சிவப்பேறடைந்தது ஈழத்துச் சைவர்களுக்குப் பேரிழப்பாகும்.







நல்லை ஆதீனத்தைத் தோற்றுவித்த முதலாவது குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 11.04.1981 இல் பூரணத்துவம் பெற்றதன் பின்னதாக, தமது இருபத்து நான்கு வயதில் பட்டமேற்று சுமார் 44 ஆண்டுகள் நல்லை ஆதீனத்தின் குருமுதல்வராக வீற்றிருந்து அறமாற்றிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யுத்த காலத்திலும் தன்னாலான பணிகளைச் சிறப்பாக ஆற்றி வந்தவர். சிறந்த மனிதநேயப் பண்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. போரும் இடப்பெயர்வுகளும் அவலங்களும் நிறைந்த போராட்டமான இக்காலத்தில் எந்த ஒரு பணபலம், பொருட்பலம், ஆட்பலமும் இன்றி ஆதீன மரபை பேணி சைவ மரபின் தூணாக விளங்கியவர்.

அரசியற் குழப்பங்கள் ஆதீனம் வரை நீளும் சூழல் வந்த போதும் மிகக் கவனமாக பக்கம் சாராமல் நடுநிலை காத்தவர். இவ்வளவுக்கும் பிறப்பு வழி குடும்ப பின்புலம், ஆழமான நவீன





கல்வி பெறாத போதும் பெரும் ஆளுமையாக நின்றவர். வாழ்வின் பிற்காலத்தில் நோய் பீடித்த போதும் துவளாமல் பணி செய்தவர். அவரது குருவான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசீர்வாதம் அவரை இதுவரை காலமும் வழிப்படுத்தியது.






வணக்கத்திற்குரிய நல்லை ஆதீனம் சீர்வளர்சீர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளுடைய இறுதி கிரியைகள் 02.05.2025 மாலை 4 மணியளவில் நல்லை ஆதீனத்தில் பெருமளவான அன்பர்கள் பங்கேற்புடன் இடம்பெற்றது. சுவாமிகள் விருப்பப்படி கலாநிதி.ஆறு. திருமுருகன் சுவாமிகள் திரு உடலுக்கு தீமூட்டினார்.





தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவைஸ்தானத்தின் பல்வேறு நிகழ்வுகளுக்கு அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா காலத்தில் இருந்தே ஆசிகள் வழங்கி ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணியவர். இயலாத











நிலையிலும் இந்த ஆண்டு நடைபெற்ற அன்னையின் நூற்றாண்டு விழாவில் நேரில் வந்து கலந்து கொண்ட பெருமகனார் என்றும் எமது வணக்கத்துக்குரியவர்.

ஆதீனத்தின் நிலைத்தகு தன்மையை உறுதி செய்ய சைவ அறிவும் கருணையும் இறை பக்தியும் சமூக அக்கறையும் கொண்ட ஒருவர் மூன்றாவது குருமகா சந்நிதானமாக பொறுப்பெடுக்க இறைவன் அருள் புரிவாராக.

















# சிதம்பர சக்கரம் என்றால் என்ன?



"அஞ்செழுத் தால்ஐந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தால்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தால்இவ் அகலிடம் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்து நின்றானே"

"ஐந்தின் பெருமையே அகலிடம் ஆவதும்
ஐந்தின் பெருமையே ஆலயம் ஆவதும்
ஐந்தின் பெருமையே அறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனும் ஆமே"

இந்த அண்ட பிண்டமென அனைத்தும் உருவாக "நமசிவய" என்ற ஐந்தெழுத்தாகிய பஞ்சபூதங்களே காரணமாகும். இந்த ஐந்தின் பெருமையை பற்றி என்குரு திருமூலர், சிவவாக்கியர், காகபுஜண்டர், வள்ளலார் என அனைவருமே எழுதியுள்ளனர். ஆனால் அவர்கள் அவற்றை உணர்ந்த வண்ணம் என்பது அவரவர்கள் சுவாசத்தை கொண்டுதானாகும். அண்டத்தில் உள்ளதெள்ளாம் பிண்டத்தில் என்றும், அண்டமாகிய இப்பிரபஞ்சத்தை விட பிண்டமாகிய இவ்வுடலே விசாலமானது என்றனர் நம் முன்னோர்கள். இப்படிப்பட்ட உடலை ஆராய்ச்சி கூடமாகவும் சுவாசத்தை கருவியாக கொண்டே அனைத்தையும் அறிந்தனர்.

"ஆச்சப்பா இந்தமுறை பதினெண் பேரும்
அயன்மாலும் அரனோடுத் தேவரெல்லாம்
மூச்சப்பா தெய்வமென்ற யறியச் சொன்னார்
முனியோர்கள் இருடியரிப்படியே சொன்னார்கள்
பேச்சப்பா பேசாமல் நூலைப் பார்த்து
பேரான பூரணத்தைத் நினைவாய்க் காரு
வாச்சப்பா பூரணத்தைக் காக்கும் பேர்கள்
வாசிநடு மையத்துள் வாழ்வார் தானே"

அதாவது சுவாசத்தை பற்றிய சித்தர்கள் பாடல்கள் கணக்கில்லாமல் இருந்தாலும், சித்தர்களுக்கு முதன்மையானவரான அகத்தியர்

சுவாசத்தை தெய்வம் என்று கொண்டே பதினெண் சித்தர்கள் முதல் அயன், மால், ஈசன், தேவர்கள் என அனைவரும் பயன்பெற்றனர் என தனது ஞானத்தில் கூறியுள்ளார். நூலாகிய சுவாசத்தை பிடித்தால் சேலையாகிய இறைவனை பிடிக்கலாம். தன்னையறிய தலைவனையறியும் முறையாகும்.

மேலும் இந்த உடலை யந்திரம் எனவும், சுவாசத்தை மந்திரம் எனவும், இவற்றை இயக்கும் விதம் தந்திரம் எனவும் கூறலாம். காரணம் மகா மேரு பீடம் என்று கூறப்படும் ஸ்ரீ சக்கரத்தின் அடுக்கு யந்திரம் என்பது நம் முதுகுத்தண்டையே குறிக்கும். அதேபோல் எண்ணற்ற யந்திரங்கள் நம் உடலின் ஒரு குறிப்பிட்ட பாகங்களையோ அல்லது முக்கிய இடங்களையோ அல்லது தலை மற்றும் மூளையின் சிறு பகுதியோ அல்லது முழுவதுமான வடிவத்தை கொண்டே வடிவமைக்கப்பட்டது. இதில் மந்திரங்களான பீஜங்களை சில குறிப்பிட்ட தந்திரமுறைகளை கொண்டு உட்சரிக்கும் போது சுவாமாகிய காற்று வெட்டப்பட்டு துள்ளியமான ஒலி ஒளி அதிர்வுகள் உள்ளும் வெளியிலும் பரவி யந்திரம் சக்தி பெருகின்றது. எப்பொழுது எல்லாம் ஒருவன் அந்த யந்திரத்திற்கு பக்கத்தில் செல்கிறானோ, அப்போதெல்லாம் அவன் உடலில் உள்ள அந்த யந்திர வடிவ பகுதி சக்திபெறும்.

சரி இதில் சுவாசத்திற்கும் பஞ்சபூதத்திற்கும் என்ன சம்பந்தம்?? நாம் சுவாசிக்கும் காற்று பஞ்சபூத தன்மையை கொண்டே செயல்படுகின்றது. அதாவது நம் உடலிலும் மனதிலும் ஏற்படும் மாற்றத்திற்கு இப்பஞ்சபூத சரமே காரணம். பூதசரத்தில் எந்த பூதத்தின் சரம் ஓடுகின்றது என கண்டுபிடிப்பதில் பல வழிகள் உண்டு. அவைகளில் சுவையை கொண்டு அறிவது. கண்ணாடியில் சுவாசத்தை ஊதி, அதில் தெரியும் வடிவத்தை கொண்டு அறிவது, நிறத்தை கொண்டு அறிவது என பலவழிகள் உண்டு.

”பாராப்பா பிருதிவியிற் கவிழ்ந்தேயோடும்
பரிவான அப்புதனில் வலத்தே யோடும்
சேரப்பா தேய்வுதனில் இடத்தே யோடும்
திறமான வாயுதனில் நேரா யோடும்
ஒரப்பா அந்தரத்தில் மேலே யோடும்
ஒன்றேனும் குறைவுப்படாது உற்றுநோக்கி
ஆரப்பா இந்நூலைப் பார்பார் கேட்பார்
அறிவான மூமின்கட்கருள் செய்தோமே”

இதில் மிக சுலபமாக சரத்தை கண்டுபிடிக்க மேற்கண்ட பாடலே சிறந்தது. அதாவது மூச்சானது கீழ்நோக்கி (பூமியை நோக்கி) கவிழ்ந்து ஓடினால் அச்சரமானது பிருதிவி (நிலம்) சரமாகும். அதுபோல் மூச்சானது இடகலையில் அல்லது பிங்கலையில் என எப்படி நடந்தாலும், மூச்சானது சாய்ந்து இடது பக்கமாக ஓடினால் அப்பு (நீர்) சரமாகும். அதே போல் வலது பக்கமாக சாய்ந்து ஓடினால் தேயு (தீ) சரமாகும். மூச்சானது ஒடிந்து நமக்கு முன்னால் நேராக ஓடினால் வாயு (காற்று) சரமாகும். வெளிவரும் மூச்சானது நாசி வழி வடிந்து நமக்கு முன்பாக மேல்நோக்கி சென்றாலும், உள்ளுக்குள்ளேயே ஓடினாலும் ஆகாய சரமாகும். இப்படி நம் மூச்சானது எந்த பூதத்தை சார்ந்து ஓடுகின்றது என்பதை சுலபமாக கண்டுபிடிக்கலாம்.

நாம் அசையா வேளையில் பிருதிவியும், அசையும் வேளையில் அப்புவும், க்'ட வேளையில் தீயும், நம்மில் ஏதேனும் சலிப்பு ஏற்பட்டு அதனால் ஏற்படும் துறவு வேளையில் காற்று சரமோடும். அதிக நேர தியானம், வாசி மற்றும் பூசை வேளையில் ஆகாய சரமோடும்.

மேலும் பூர்வபட்ச வியாழனில் பூமி சரமும், அமரபட்ச வியாழனில் நெருப்பும், வெள்ளி நீரும், புதன் காற்றும், சனிக்கிழமை ஆகாய சரமும் மேற்கண்ட நாட்களில் முதலில் ஓட அதிக வாய்ப்புகள் உள்ளன. மேலும் ஞாயிறு நீர் சரமும், திங்கள், செவ்வாய், வியாழன் போன்ற நாட்களில் தீ சரமும், புதன் பூமியும், வெள்ளி காற்றும், சனி ஆகாய சார்ந்த சரம் நடப்பது மிக்க நல்லது.

பொதுவாக ஒருவருக்கு மண் மற்றும் நீருக்குண்டான சரம் நடந்தால், அவர் சத்துவ குணமுடையவராவார். மேலும் ஒருவருக்கு கோபம், அகங்காரம், ஆணவம், காமம் போன்ற எண்ணங்கள் தீ சரம் நடக்கும்போது உண்டாகும். எனவே அதை கவனித்து பக்தியில் மனதை செலுத்தினால் நல்லது. காற்று சரம் நடந்தால் அவன் ஞானியை நெருங்கியவன். ஆகாய சரம் நடந்தால் அவன் கடவுளை நெருங்கியவன். தீ சரம் பக்தியில் தீவிரமாயிருப்பவனுக்கும், நீர் சரம் தான தர்ம செய்பவனுக்கும், மண் சரம் ஓடினால் அவன் உபதேசம் செய்பவனாகவும் இருப்பான்.

மேலும் காலையில் படுக்கையிலிருந்து எழும்போது கொட்டாவி விடாமல் மூச்சை உள்ளிழுத்து கொண்டு எழுந்திருந்தல் மிக்க நலமாய் அமையும். சூரியகலையில் மண்சரமோ, நீர்சரமோ

ஓடும்போது அந்நிலையில் எக்காரியம் ஆகவேண்டியிருப்பினும் அக்காரியத்தினை செயலில் நோக்க விரைவில் அது எளிதாக முடியும். மண்ணும் நீரும் கலந்தேயிருப்பது போல உடலில் மாமிசமும் உதிரமும் கலந்தேயுள்ளன. ஆகாயமும் காற்றும் கலந்தேயிருப்பது போல சரமாகிய மூச்சு காற்று ஆகாய பந்தத்தில் கலந்தேயுள்ளது. அக்கினி மட்டும் பூமியிலும், பிரபஞ்சத்திலும், உடலிலும் அனைத்திலும் பொது நிலையாய் மத்தியில் உள்ளது.

இதுவரை சர சாஸ்திரம் ஓரளவு நிறைவடைகின்றது. இதில் இன்னும் பழகப் பழகப் இப்பூத சரமானது எப்பூத சரத்தில் போய் முடிகின்றது என்பதை கண்டு இந்த பஞ்சபூத சரத்தையும் இடகலையில் 25 ஆகவும், பிங்கலையில் 25 ஆகவும் பிரிக்கலாம். அதாவது நமது மூச்சு பிருதவியினை பூமிசரமூச்சில் தொடங்கி எப்பூத சரத்தில் முடிகின்றது என காண வேண்டும். காண முடியும். இந்த அளவு துள்ளியமாக பார்க்கும் முறையில் நம்மற்றில் உலகின் ஆதிஅந்த செயலின் முக்காலங்களையும் நன்கு அறிந்துணர முடியும். மேலும் இடது 25யும், வலது 25யும் மற்றும் சுழுமுனையாகிய 1யும் சேர்ந்த கூட்டுதொகையே 51 அட்சரமாகிய சிதம்பர சக்கரமாகும். இதை விளக்க விளங்கி கொள்ள தெரிந்தவன் பரத்தை தெரிந்தவன் ஆவான்.

சிதம்பர சக்கரத்தை தெரிந்து கொள்வதற்குமுன்,

நமசிவய மந்திரத்தில்
ந- நிலமாகவும்,
ம- நீராகவும்,
சி- நெருப்பாகவும்,
வ- காற்றாகவும்,
ய- ஆகாயமாகவும் உள்ளன.

இவற்றின் நிறம், சுவை, வடிவம், தூரம் ஆகியன்
ந-நிலம்-பொன்-சதுரம்-தித்திப்பு-12 அங்குலம்,
ம-நீர்-வெண்மை-பிறை வடிவம்-துவர்ப்பு-16 அங்குலம்,
சி-தீ-சிகப்பு-முக்கோணம்-உவர்ப்பு-8 அங்குலம்,
வ-காற்று-கருப்பு-அறுகோணம்-புளிப்பு-4 அங்குலம்,
ஆகாயம்-பச்சை-வட்டம்-கார்ப்பு-1 அங்குலமாகும்.

இவற்றில் நிலத் தத்துவத்தில் நிலத்தில் நிலம், நிலத்தில் நீர், நிலத்தில் தீ, நிலத்தில் காற்று, நிலத்தில் ஆகாயம் என ஐந்து

பிரிவுகளாக உள்ளும் வெளியும் இயங்கும். இதேபோல் நீர், தீ, காற்று மற்றும் ஆகாயம் என மொத்தம் 25 பிரிவுகளாக இயங்கும் விதத்தை 25 கட்டத்திற்குள் வைத்து ஒட்டு மொத்த பிரபஞ்ச இயக்கத்தை குறிப்பிடுவதே சிதம்பர சக்கரமாகும்.

"சிதம்பர சக்கரம் தான் அறிவார்- இந்த
சீமையில் உள்ள பெரியோர்கள் சிதம்பர
சக்கரம் தானும் என்றால்- அதற்குள்
தெய்வத்தை யல்லோ அறியவேணும்"

சிதம்பர சக்கரத்தின் விளக்கத்தை சமீபத்தில் வந்த வள்ளலார் தனது அகவலில் தெளிவாக எழுதியுள்ளார். அனைவரும் அகவலை ஒருமுறையாவது படித்து பார்க்கவும். ஆன்மீகத்தின் ரகசியமான முறைகள் மற்றும் சூட்சமங்கள் உங்களுக்குள் கேள்வியாய் உதித்து அதை நோக்கி பயணிக்க வைக்கும். விடை என்பது எப்படி வேண்டுமானாலும் கிடைக்கலாம். சிதம்பர சக்கரத்தை ஸ்தூலம், சூட்சமம், காரணம் என பல பிரிவுகளில் விளக்கிக் கொண்டு செல்லலாம். இப்பதிவில் சுவாசத்தால் ஏற்படும் மாற்றத்தையும் அதில் இப்பூதங்களில் செயல்பாடுகளையும் மட்டும் இங்கு சொல்கிறேன். விரிவாக கற்க திருமந்திர றாயவளயயி வகுப்பில் கற்கவும்.

சரமானது மண்ணை சார்ந்து நடக்கும்போது

மண்ணில் மண் நடந்தால்- எதிலும் நிறைவு உண்டாகும்.
மண்ணில் நீர்- அடிசேரலாம்.
மண்ணில் காற்று- அலைந்து அலைந்து அவனடி சேர்வர்.
மண்ணில் நெருப்பு- உடல் உஷ்ணம் அதிகமாகும்.
மண்ணின் ஆகாயம்- பிடி கிடைக்காமல் சுற்றிக்கொண்டே இருப்பர்.

சரமானது நீரை சார்ந்து நடக்கும்போது

நீரில் நிலம்- மூச்சு நீருக்குரிய சரத்திலாரம்பித்து மண்ணிற்குரிய பிருதிவி சரத்தில் முடிந்தால் கலத்தல் எனும் ஐக்கிய பாதையான சமாதி நிலையை அடையலாம்.
நீரில் நீர்- எல்லாவற்றிலும் வளர்ச்சி.
நீரில் நெருப்பு- உடல் குளிர்ச்சியாகும்.
நீரில் காற்று- அமிர்தம் சுரக்கும்.
நீரில் ஆகாயம்- அப்படியே அதிர்ந்து போய் ஒரு சில நிமிடங்கள்

இருக்கும் நிலையில் இம்மூச்சு ஓடும்.

சரமானது தீயை சார்ந்து நடக்கும்போது
தீயில் மண்- ஆயுள் நீட்டிப்பு.
தீயில் நீர்- ஆயுள் குறைவு.
தீயில் தீ- இருநிலை மாற்றம்.
தீயில் காற்று- மயக்கத் தோற்றத்தை உருவாக்கும்.
தீயில் ஆகாயம்- புவிஈர்ப்பு விசையை மீற முடியும்.

சரமானது காற்றை சார்ந்து நடக்கும்போது

காற்றில் மண்- நோய் அறிகுறி.
காற்றில் நீர்- விந்து மேலேறும்.
காற்றில் தீ- உடம்பில் தீயின் சுழற்சியை காணலாம்.
காற்றில் காற்று- காந்தவியல் அழுத்தம் மேற்பட்டு தலை கணக்கும், நாதம் கேட்கும்.
காற்றில் ஆகாயம்- பாவபுண்ணியம் கலைந்து எரிந்துவிடும் நிலை.

சரமானது ஆகாயத்தை சார்ந்து நடந்தால்
ஆகாயத்தில் மண்- உச்சி திறக்கும், தியானத்திற்கு உகந்தது.
ஆகாயத்தில் நீர்- நம் சக்தியானது இடம்விட்டு இடம் நகரும்.
ஆகாயத்தில் காற்று- விசுத்தியில் நிற்கும்
ஆகாயத்தில் தீ- நந்தியாகிய பரமாத்மாவை தெளிவாக காண முடியும்.

ஆகாயத்தில் ஆகாயம்- இருள் நிலை, மாயை, முழு ஞானம் உற்பத்தியாகும்.

மேலும் சந்திரகலை குளிர்ச்சியாக இருப்பதால் அது உஷ்ணத்தை நாடி செல்லும். இதில்தான் அறிவு உதிக்கின்றது. இதேபோல் சூரியகலை உஷ்ணமானதால் குளிர்ச்சியை நோக்கி செல்லும். இதில் மாயை அல்லது பிரமை உண்டாகின்றது. பிரமை என்பது பிரம்மதோடு இணைந்திருப்பது என்ற பொருளாகும். இந்த வேறுபாடுகளை கொண்டு நீங்களே உங்கள் உள்நிலையும் உங்கள் வெளி உலக நிலையையும் துல்லியமாக ஒப்பிட்டு பார்த்து கொள்ளலாம்.

அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் என்பதற்கு ஏற்றாற் போல் இந்த பிண்டத்தில்(உடலில்) பஞ்சபூத சரத்தால் என்னென்ன

மாற்றம் ஏற்படுகின்றதோ அதேபோல் அண்டமாகிய பிரபஞ்சத்திலும் மாற்றம் நிகழும். உங்கள் மனதில் மேலும் தெளிவாக பதிய வேண்டுமெனில் கீழேயுள்ள சாதாரணமாக நடைமுறையில் (Practical changes around us in the nature) ஏற்படும் இயற்கை மாற்றத்தை புரிந்துகொண்டால் போதுமானது. இதுவே நம் உடலுக்கு உள்ளும் வெளியும் நிகழ்பவை.

பிருதவியில் ஏற்படும் மாற்றம்:
மண்ணை மண்ணில் போட்டால் நிறையும்.
மண்ணை நீரில் போட்டால் அடி செல்லும்.
மண்ணை காற்றில் அலைந்து வேறிடம் பின்பு கீழ் அடிவிழும்.
மண்ணை தீயில் உஷ்ணமாகும். மண்ணை ஆகாயத்தில் சுழலும்.

அப்புவில் ஏற்படும் மாற்றம்:
நீரை மண்ணில் கலந்தால் பரவும்.
நீரை நீரில்- பெருகும்.
நீரை தீயில்- குளிர்ச்சி.
நீரை காற்றில்- ஆவியாகி மேகமாகி மழை வரும்.
நீரை ஆகாயத்தில்- உறை நிலை.

தேயுவால் ஏற்படும் மாற்றம்:
தீயை மண்ணில் போட்டால் அழியாநிலை(உஷ்ணம்).
தீயை நீரில் போட்டால் அழிவுநிலை. தீயை தீயில் இருநிலை மாற்றம்.
தீயை காற்றில் அனல், கானல்நீர், வெக்கை, உருக்கம்.
தீயை ஆகாயத்தில் குமிழாகி பறக்கும்.
வாயுவால் ஏற்படும் மாற்றம்:
காற்றை மண்ணில் விரிசல்.
காற்றை நீரில் நீர் சுழற்சி.
காற்றை தீயில் தீ சுழற்சி.
காற்றை காற்றில் காந்தவியல். அழுத்தம், காற்றை ஆகாயத்தில் மேகம் கலையும்.

ஆகாயத்தால் ஏற்படும் மாற்றம்: ஆகாயத்தை மண்ணில் பிரளயம், தியானம்.
ஆகாயத்தை நீரில் புவி நகரும், இடமாறும்.
ஆகாயத்தை தீயில்-
ஒளி பெருகும்.
ஆகாயத்தை காற்றில்- கடல்நீர் உள்வாங்கும்.

ஆகாயத்தை ஆகாயத்தில் இருநிலை, மாயை, பிரமை.

நம் ஸ்தூல சூட்சும சரீரங்களில் ஸ்தூலமாக மற்றும் சூட்சுமமாக நடைபெறும் காரண காரியங்களுக்கு பஞ்சபூதங்களின் பயன்பாடு பற்றி அடுத்து சொல்கிறேன்....

ஸ்தூலத்தில்
-------------------------
மண்ணில் மண் சேர்ந்தால் உடலில் சக்தி குறைந்து அசதி ஏற்படும்.
மண்ணில் நீர்- உடலில் மாமிசம் உருவாகின்றது,
மண்ணில் தீ- சருமமாகிய தோல் உருவாகின்றது,
மண்ணில் வாயு- நரம்புகளும்,
மண்ணில் ஆகாயம்- ரோமமும்,

நீரில் நீர்- சிறுநீரும்,
நீரில் மண்- உமிழ்நீரும்,
நீரில் வாயு- உதிரமும்,
நீரில் தீ- வியர்வையும்,
நீரில் ஆகாயம்- சுக்கிலமும்,

தீயில் தீ- நேத்திர கண்ணும்,
தீயில் ஆகாயம்- செவியும்,
தீயில் வாயு- சரீரமும்,
தீயில் நீர்- வாயும் நாக்கும்,
தீயில் மண்- நாசியும்,

காற்றில் மண்- இருதயமும் பிராணக் காற்றும்,
காற்றில் நீர்- குதமும் அபான வாயுவும்,
காற்றில் காற்று- சர்வ நாதங்களும் வியானனும்,
காற்றில் தீ- கழுத்தும் உதானனும்,
காற்றில் ஆகாயம்- தொப்புளும், சமானனும்,

ஆகாயத்தில் மண்- இருதயமும்,
ஆகாயத்தில் நீர்-நாசியில் பித்தமும்,
ஆகாயத்தில் தீ- மார்பும்,
ஆகாயத்தில் காற்று- கண்டமும்,
ஆகாயத்தில் ஆகாயம்- சிவமும் உருவாகின்றன.
சூட்சுமத்தில்
------------------------

மண்ணில் மண் கலந்து குதமும்,
மண்ணில் நீர்- குய்யமும்,
மண்ணில் தீ- கைகளும்,
மண்ணில் காற்று- பாதங்களும்,
மண்ணில் ஆகாயம்- வாக்கும்,

நீரில் ஆகாயம்- சத்தமும்,
நீரில் காற்று- தொடு உணர்வும்,
நீரில் தீ- பார்வையும்,
நீரில் நீர்- சுவையும்,
நீரில் மண்- வாசனையும்,

தீயில் தீ- பசியாகிய தீபாக்கினியும்,
தீயில் மண்- தாகமும்,
தீயில் நீர்- தூக்கமும்,
தீயில் காற்று- கொட்டாவியும்,
தீயில் ஆகாயம்- சங்கமமாகிய கலத்தலும்,


வாயுவில் வாயு- ஓட்டமும்,
வாயுவில் நீர்- இருத்தலும்,
வாயுவில் தீ- தத்தித்தத்தலும்,
வாயுவில் மண்- நடத்தலும்,
வாயுவில் ஆகாயம்- படுத்தலும்,

ஆகாயத்தில் மண்- ஆசையும் அகங்காரமும்,
ஆகாயத்தில் நீர்- துவேசமும்,
ஆகாயத்தில் தீ- பயமும்,
ஆகாயத்தில் காற்று- வெட்கமும், ஆகாயத்தில் ஆகாயம்- மேகமும் உருவாகின்றன.

ஆக இதன் மூலம் ஒரு பூதமானது மற்றைய பூதங்களில் கலந்து உடலிலும், வெளியிலும், ஸ்தூலமாகவும், சூட்சமமாகவும் ஏற்படும் மாற்றங்களையும், பஞ்சபூதங்களே பிறக்கும் முன் தாயின் கருவிலும், பிறந்தபின் வெளியிலும் உடல் உறுப்புகள் உருவாவதற்கு காரணமாகும். மேலும் நமக்கு ஏற்படும் ஆணவம், கோபம், ஆசை போன்றவற்றிற்கும் இப்பூதங்களே காரண காரியமாகும். இவை அனைத்தையும் அனுபவத்தில் உணர வாழ்த்துக்கள்.




# சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாளின் வரலாறு



சீரணி நாகபூஷணி அம்மன் கோயில் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தென்மேற்குப் பிரிவில் சண்டிலிப்பாய் என்ற கிராமத்தில் உள்ள ”சீரணி”யில் அமைந்துள்ளது.


தம்மை வழிபட்டுப் பூசித்த நாகமொன்றைத் தம்மருமைத் திருமேனியில் ஆபரணமாய் பூண்ட காரணத்தால் இத்தேவியும் நாகபூஷணியம்மை என்று அழைக்கப்படுகிறாள்.

நாகபூஷணி வழிபாட்டுக்கு யாழ்ப்பாண நாட்டின் இரு கண்களாக விளங்குவன நயினை, மற்றும் சீரணி என்னுமிடங்களில் விளங்கும் நாகபூஷணியம்மை ஆலயங்களாகும்.

## ஆலய வரலாறு

அக்காலத்தில் இப்பதியிலே சாத்திரியார் சண்முகம் பொன்னம்பலம் என்ற ஒருவர் இருந்தார். அவர் ஓர் இயந்திரம் வைத்துப் பூசை செய்து பிரபல்யமாகச் சாத்திரம் சொல்லி வந்தார்.

இவருடன் இராமுத்தர் என்னும் ஒருவர் வசித்து வந்தார். சண்முகம் பொன்னம்பலம், இயந்திரத்தைச் சரிவரப் பூசிக்காமையால் அவர் வீட்டில் சில துர்ச்சகுனங்கள் நிகழ்ந்தன. அவை முத்தர்க்கு பிடிக்காமையாலும், இயந்திரம் இராக்காலத்தில் கலகலப்பான



பேரொலி செய்தமையாலும் அதனை அப்புறப்படுத்த நினைத்தார்.

ஒருநாள் முத்தர் நன்றாய் மதுபானம் அருந்திவிட்டுக் குறித்த இயந்திரத்தையும் அத்துடனிருந்த பொருட்களையும் பெட்டியுடன் எடுத்துச் சென்று வீட்டினருகாமையிலுள்ள ஓர் அலரிப் பூம்பற்றைக்குள் போட்டுச் சென்று விட்டார். எம்பெருமாட்டி நாகபூஷணியம்மை இங்குள்ள அன்பர்கள் பலரிடத்தே கனவிற் தோன்றி ”நான் நாகபூஷணி, என்னை ஆதரியுங்கள்” எனக் காட்சியளிப்பாளாயினாள்.

”நாமெல்லோரும் வறியவர்கள் தாயே! எங்ஙனம் எங்களால் ஆதரிக்க முடியும்” என அன்பர்கள் கூறி வருந்தினார்கள். ”என்னை ஆதரியுங்கள், தொண்டர்கள் வருவார்கள். செல்வம் செழிக்கும், நாடு நலம் பெறும், வாழ்வு வளம் பெறும்” என்று அவ்வன்பர்களுக்கு அருள் பாலித்துக் குறித்த அன்பராகிய முருகேசபிள்ளைக்குக் கனவிலே வெளிப்பட்டுப் பல முறைகளிலும் பல திருவருட் தன்மைகளைக் காட்டியருளினாள்.

ஒரு முறை ஓரிடத்தைக் குறிப்பிட்டு ”இவ்விடத்திலே நம்மைத் தாபித்து வழிபட்டு வருவாயாக” என அம்மை அருளிச் செய்தாள்.



அவர் தமது நிலைமையை எண்ணி அஞ்சி அச்சொப்பனங்களைப் பிறருக்குச் சொல்லாது தம்முள்ளே சிந்தித்து வழிபட்டு வருவாராயினர்.

இங்ஙனமான 1896 விளம்பி வருடம் சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தன்றிரவு தேவி சொப்பனத்திலே வெளிப்பட்டு, ”உனக்குச் சொன்னவைகளை நீ உண்மையென்று சிந்தித்தாய் இல்லை. அதனுண்மையை உனக்கு இப்பொழுது காட்டுவோம். அதோ தோன்றுகின்ற தென்னை மரத்திலே சில இளநீர் பறித்து வந்து தா!” என்று கூறியருளினார்.


அன்பருக்கு அது ஒரு முதிர்ந்த, வரண்ட படுமரமாகத் தோன்றியது, அதையுணர்ந்த அவர் "அதிற் குரும்பைகள் இல்லையே! யான் உமக்கு எப்படி இளநீர் தரக்கூடும்", என "நன்று! நீ சென்று சமீபத்திலே பார், வேண்டிய குலைகள் தோன்று"மென அம்மையார் அருளினார். அங்ஙனமே அவர் சென்று பார்த்துத் தொங்கும் இளநீர்க் குலைகளைக் கண்டு வியப்பும் அச்சமுங் கொண்டவராய்ச் சில குரும்பைகளைப் பறித்துக் கொணர்ந்து கொடுத்தார். அவரும் அதிக தாகமுடையார் போலப் பருகினர். பின்னர் அவரை நோக்கி "அன்பனே! இந்த இடத்தைத் தோண்டிப்பார், இங்கு ஒரு சிலை தோன்றும். அதனையே மூலமாக வைத்து ஒரு கொட்டகை அமைத்து வழிபடுவாயாக. சில காலத்துள் பல திசைகளிலுமிருந்து அடியார்கள் வந்து வழிபட்டு இட்ட சித்திகளையெல்லாம்




அடைவார்கள். வேண்டிய திரவியங்களையெல்லாம் காணிக்கையாக இடுவார்கள். அவற்றைக் கொண்டு திருப்பணிகளைச் செய்யத் தொடங்குக. அது பூர்த்தியாகும் வண்ணம் அருள் செய்வோம். நமக்கு வழிபாடு அன்பின் பூசையேயாகும். மேலும் உனது மனம் புனிதமுறும் வண்ணம் ஒரு மந்திரமும் உபதேசஞ் செய்வோம்" எனவருளி, மறைந்தருளினார்.


### திருவுருச்சிலை தோன்றுதல்

குறிப்பிட்ட இடத்தை மறுநாள் அகழ்ந்து பார்த்தார். அங்கு ஒரு விம்ப வடிவமைந்த சிலை காணப்பட்டது. அதனைக் கண்டு



பரவசப்பட்டவராய் ஒரு மண்டபம் அமைத்தார். (1896) ஆடி மாதம் திங்கட்கிழமையும் அமாவாசையுங் கூடிய புண்ணியதினத்திலே, பூசை தொடங்கி காலந் தவறாது நடப்பித்து வந்தார். நாலா திசைகளினின்றும் அடியார்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்தார்கள். நாகபூஷணியம்மையை வழிபட்டனர்.

இவ்வரலாறு குறித்தும், குட்டம், காசம், ஈளை முதலான கன்ம நோய்களினால் வருந்தியோர் இத்தலத்தை அடைந்து தேவியை வழிபட்டுத் தம்நோய்கள் தீரப் பெற்ற கதைகளும், நாக சாபத்தினாலே நீண்டகாலம் பிள்ளைப் பேறில்லாதவர்கள் எம்பெருமாட்டி எழுந்தருளியிருக்கும் இத்தலத்தையடைந்து வந்தனை வழிபாடுகள் புரிந்து பிள்ளைச் செல்வம் பெற்று உய்வடைந்த கதைகளும் அம்பாளின் அருட் செயல்கள் பற்றிப் பல கர்ண பரம்பரையான கதைகள் காலங்கண்ட முதியோர்களினாலே கூறப்படுகின்றன.





நாகபூஷணி அம்பாளின் மஹோற்சவம் வருடந்தோறும் சித்திரா பூரணை தினத்தை இரதோற்சவ நாளாக கொண்டு 18 தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் (2025 இல் ) மஹா கும்பாபிஷேகம் நிகழப்பெற்று சீரணி நாகபூஷணி அம்பாளின் தேவஸ்தானம் தேலலோகமாக காட்சியளிக்கிறது.

ஆக்கம் ~ மு.பாபுஜி
பண்ணாகம்

## கோளறு பதிகம் முதல் பாடல் வரிகளை ஓவியமாக மாற்றிய திரு.பத்மவாசன்



முதல் பாடல் :

*வேயுறு தோளிபங்கன்
விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.*

இதை பூஜையறையில் வைத்து வழிபடலாம் , நவக்கிரக ப்ரீத்தி சித்திக்கும்.

## இதய அஞ்சலி

ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளின் தாயார் 92 வயதில் இறையடியில் 26.04.2025 அமைதியடைந்தார். இறுதி வழிபாடு 27.4.2025ஞாயிறு காலை7.00மணிக்கு கோப்பாய் பழம்றோட் சுப்பிரமுணிய கோட்டத்தில் நடைபெற்றது.

அன்னாரின் ஆத்மா இறை பதம் அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.



# தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் ஆலய வருடாந்த இரதோற்சவம் பக்தி பூர்வமாக நடைபெற்றது







ஆலயத்தின் சிறப்பை மகோற்சவங்கள் எடுத்து கூறும். அந்த வகையில் தெல்லிப்பழையில் வீற்றிருந்து அருள் புரியும் காசிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அழித்தல் தொழிலை குறிக்கும் தேர்த் திருவிழா 23.04.2025 அன்று பெருமளவு பக்தர்கள் வடக் கயிறு பற்றி இழுக்க பக்தி பூர்வமாக இடம்பெற்றது.







# காவடிக் கந்தன் என போற்றி வழிபாடாற்றப்படும் மாதகல் நுணசையம்பதி முருகமூர்த்தி கோவில் வரலாறு



மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வயல்கள், நுணா மரங்கள் மத்தியில் அமைந்தமையால் நுணசை எனப் பெயர் கொண்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முன்னர் தானாக தோன்றிய கடம்பமரத்தை விருட்சமாக கொண்டு கடம்பனுக்கு கோயில் அமைக்கப்பட்டது என வரலாறுகள் கூறுகின்றன.

நுணசை முருகமூர்த்தி ஆலயமானது மூர்த்தியாக வேற்படையையும் விருட்சமாக கடம்பமரத்தையும் தீர்த்தமாக ஏழு குண்டுகள் நிறைந்த குளத்தையும் கொண்டுள்ளது.

பல பக்தர்கள் தமது நேர்த்திக்கடன் தீர்ப்பதற்கு பல வித காவடிகள் எடுப்பது வழமை.




காவடிக்கு புகழ் பெற்ற கந்தன். அயல் கிராமங்களில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் மக்கள் திரளாக வருகை தந்து தம் நேர்த்திகளை நிறைவேற்றுவர். சித்திரா பௌர்ணமியை தீர்த்தமாக கொண்டு 12 தினங்கள் திருவிழா நடைபெறுவது வழக்கம்.

ஆக்கம் ~ மு.பாபுஜி
பண்ணாகம்

# சிறப்பாக நடைபெற்ற சித்திரைப் பரணி உற்சவம்





தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில், இந்த ஆண்டு சித்திரைப் பரணி நாளில் சிறப்பு உற்சவம் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

இந்த சித்திரைப் பரணி உற்சவம், பக்தர்களின் உள்ளங்களில் இறையருளின் விளக்கேற்றி, துர்க்கையின் பரிபூரண அருளுடன் மன அமைதி மற்றும் நன்மைகளை வழங்கிய ஒரு ஆன்மீக விழாவாக அமைந்தது.







# வெளிநாட்டவர்களும் பங்குபற்றிய கதிர்காம பாதயாத்திரை

மிக நீண்ட வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட கதிர்காம பாதயாத்திரை, தமிழர் ஆன்மிக கலாச்சாரத்தின் பிரதான தூ ண்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த யாத்திரை, பக்தியையும், துறவறத்தையும், சகிப்புத்தன்மையையும் பிரதிபலிக்கும் உன்னதமான பயணமாக இருப்பது சிறப்பம்சமாகும்.



1980-களில், இந்த யாத்திரையின் மேன்மையை உணர்ந்து, அது ஒரு உயிர் வாழும் ஆன்மிகச் சடங்காக இருப்பதை நன்கு புரிந்துகொண்ட அமெரிக்க சிந்தனையாளர் பற்றிக் ஹரிகன் (Patrick Harrigan) அவர்கள், செல்வச் சந்நிதி முருகனின் கருணையினால் பாதயாத்திரையில் ஈடுபட்டார். ஒரு வெளிநாட்டவர் என்ற வகையிலும், அவருடைய ஆன்மிகத் தேடலும், இலங்கைத் தமிழர் சமய மரபுக்கு நெருக்கமாக இருப்பதும், இந்த நிகழ்வை மேலும் மனதைக் கவரும் விதமாக மாற்றியது.

பொதுவாக யாத்திரை என்பது சதுரங்க ஆட்டம் அல்ல் அது உளச்சோதனை. கதிர்காமத்தை நோக்கிய இந்த பயணம்,



சடங்குகளின் வழியாக அல்ல, ஆன்மாவின் ஆழத்தை நோக்கிய பயணமாகவே உணரப்படுகிறது. பசுமை வனப்பகுதிகள், காடுகள், கிராமங்கள், மழை, வெயில், பசி மனிதர்களின் உதவி – இவை அனைத்தும் யாத்திரைக்காரரின் வாழ்க்கை அனுபவமாக இயந்திரமடைகின்றன.

மிக நீண்ட வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்ட கதிர்காம பாதயாத்திரை, தமிழர் ஆன்மிக கலாச்சாரத்தின் பிரதான தூண்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இந்த யாத்திரை, பக்தியையும், துறவறத்தையும், சகிப்புத்தன்மையையும் பிரதிபலிக்கும் உன்னதமான பயணமாக இருப்பது சிறப்பம்சமாகும்.


1980-களில், இந்த யாத்திரையின் மேன்மையை உணர்ந்து, அது ஒரு உயிர் வாழும் ஆன்மிகச் சடங்காக இருப்பதை நன்கு புரிந்துகொண்ட அமெரிக்க சிந்தனையாளர் பற்றிக் ஹரிகன் (Patrick Harrigan) அவர்கள், செல்வச் சந்நிதி முருகனின் கருணையினால் பாதயாத்திரையில் ஈடுபட்டார். ஒரு வெளிநாட்டவர் என்ற வகையிலும், அவருடைய ஆன்மிகத் தேடலும், இலங்கைத் தமிழர் சமய மரபுக்கு நெருக்கமாக இருப்பதும், இந்த நிகழ்வை மேலும் மனதைக் கவரும் விதமாக மாற்றியது.



பொதுவாக யாத்திரை என்பது சதுரங்க ஆட்டம் அல்ல் அது உளச்சோதனை. கதிர்காமத்தை நோக்கிய இந்த பயணம், சடங்குகளின் வழியாக அல்ல, ஆன்மாவின் ஆழத்தை நோக்கிய பயணமாகவே உணரப்படுகிறது. பசுமை வனப்பகுதிகள், காடுகள், கிராமங்கள், மழை, வெயில், பசி மனிதர்களின் உதவி – இவை அனைத்தும் யாத்திரைக்காரரின் வாழ்க்கை அனுபவமாக இயந்திரமடைகின்றன.

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 134 ஆவது பிறந்தநாள் 29.04.2025 அன்று கொண்டாடப்பட்டதை முன்னிட்டு அவரது முத்தான கவிதைகளில் ஒன்று பிரசுரமாகிறது.



தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!
(தமிழுக்கும் அமுதென்று)

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!
(தமிழுக்கும் அமுதென்று)

# செய்த தவறை உணராதவன் சேர்த்து வைத்த பாவங்கள்



ஒரு ஞானியிடம் இரண்டு பேர் வந்து தங்களின் பிறவித் துன்பத்திலிருந்து விடுதலை அடைய வழி காட்டுமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள்.

ஒருவன் ஞானியிடம் சுவாமி நான் ஒரு பெரிய பாவம் செய்து விட்டேன். என் மனம் அதை நினைத்து தினமும் துடிக்கிறது. நான் செய்த பாவத்துக்கு பரிகாரம் உண்டா? இந்த பிறவித் துன்பத்திலிருந்து விடுபட ஏதேனும் வழிகள் இருக்கிறதா? என்று வருத்தத்தோடு கேட்டான்.

அடுத்தவன் ஞானியிடம் நான் இவர் அளவுக்குப் பெரிய பாவம் எதுவும் செய்யவில்லை. சின்னச் சின்னப் பொய்கள் சிறு ஏமாற்றுக்கள் இப்படி நிறைய செய்துள்ளேன். என்னை தண்டிக்கும் அளவுக்கு இவை ஒன்றும் பெரிய பாவங்கள் இல்லை.

ஆகவே எனக்கு விரைவில் பிறவித் துன்பத்தில் இருந்து விடுபட வழி சொல்லுங்கள் என்று தான் தவறு செய்து விட்டோம் என்ற வருத்தம் கூட இல்லாமல் கேட்டான்.

ஞானி முதல் கேள்வி கேட்டவனிடம் நீ போய் பெரிய பாறை ஒன்றைத் தூக்கி வா என்றார். இரண்டாவது கேள்வி கேட்டவனிம் நீ போய் ஒரு கோணி நிறைய சிறு கற்களைப் பொறுக்கி வா என்றார். இருவரும் அவ்வாறே செய்தனர். முதல் நபர் ஒரு பெரிய பாறையைத் தூக்கி வந்தான். அடுத்தவன் கோணி நிறைய சிறு கற்களைப் பொறுக்கிக் கொண்டு வந்தான்.

இப்போது ஞானி இருவரிடமும் தாங்கள் இந்த கற்களை எங்கிருந்து கொண்டு வந்தீர்களோ சரியாக அந்த இடத்திலேயே திரும்பப் போட்டு விட்டு வாருங்கள் என்றார். முதல் நபர் பாறையை எடுத்துக் கொண்டுபோய் எடுத்த இடத்தில் வைத்து விட்டுத் திரும்பினான். இரண்டாமவன் தயக்கத்துடன் இவ்வளவு கற்களை நான் எப்படி சரியாக அவை இருந்த இடத்திலேயே வைக்க முடியும்? என்று கேட்டான்.

ஞானி சொன்னார். இந்த காரியம் முடியாதல்லவா? அவன் பெரிய தவறு செய்தான். அதற்காக வருந்தி அழுது மன்னிப்புக் கேட்டு அவன் மாற்றுப் பரிகாரம் கேட்டு வந்திருக்கிறான்.

கல்லை எடுத்த இடத்திலேயே போட்டு விட்டு வந்தது போல அதற்கான வழியை செய்து விரைவில் பிறவித் துன்பத்தில் இருந்து விடுபடுவான். நீ சின்னச் சின்னதாக ஆயிரம் தவறுகள் செய்தும் அவை பாவம் என்று கூட உணராதவன்.

யாரெல்லாம் பாதிக்கப்பட்டவர்கள் என்பது கூட உனக்கு நினைவிருக்காது. செய்த தவறை உணர்ந்து வருத்தப்பட்டு அந்த தவறுக்கும் மேலான நன்மைகளை செய்தால் மட்டுமே உனக்கு நன்மை நடக்கும். அதுவரை உனக்கு பிறவித் துன்பத்தில் இருந்து விடுதலை என்பது மிகவும் கடினம் என்றார்